**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு - 2023**

------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1972 இன் 1 இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியின் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான இந்த பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளும் அடிப்படையில் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானக் கூற்றில், உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அடங்கிய முக்கிய விடயங்கள் மாற்று வழிகள் மூலம் உறுதிப்படுத்துவற்கு அல்லது மெய்ப்பிப்பதற்கு எனக்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்று, அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல்கள் கூற்று தயாரிக்கப்படும் பெறுமதிகள் அல்லது விடயங்களில் பதியப்பட்ட அல்லது பதியப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கல் ஒன்று மேற்கொள்வதற்கு தேவைப்பாட்டினை எனக்கு தீர்மானிப்பதற்கு முடியாதிருந்தது. அதன்படி, இந்தக் காணிகளின் நியாயமான பெறுமதிகள் கணக்குகளின் மூலம் சித்தரித்துக் காட்டப்படாததுடன், சரியான தன்மை மற்றும் காணிகளின் ஒட்டுமொத்த பெறுமதி தொடர்பாக கணக்குகளில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதுமானதும் பொறுத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பந்தி 141(அ) இற்கு இணங்க இயற் கணிப்பு நலன்கள் மற்றும் நட்டங்கள் இனங்காணப்பதற்காக நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது உட்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | இயற் கணிப்பு நலன்கள் மற்றும் நட்டங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கிற்கு நியமங்களின் படி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மூலதன ஒதுக்க மீதி ரூபா 2,501,671,968 | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு இணங்கியுள்ளது. | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மூலதன ஒதுக்க மீதி மற்றும் பிடித்து |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு மீதி ரூபா 2,750,521,503 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 2,501,332,952 தொகை மற்றும் ரூபா 2,116,741,865 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 339,952 தொகை மற்றும் ரூபா 633,779,638 தொகை என கூட்டுத்தொகை ரூபா 634,118,654 இற்காக வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | | வைக்கப்பட்ட உழைப்பு மீதிகள் என நிதி நிலைமைக் கூற்று மீதிகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | காணிகள் விற்பனவு, வயற் காணிகள் விற்பனவு மற்றும் காணிகளை தனதாக்கல் வருமானங்களின் 40 சதவீதப் பெறுமதியாகிய ரூபா 214,115,687 தொகை மூலதன ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதி பிடித்து வைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிலிருந்து கழித்திருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சரி செய்வதற்கு இணங்கியுள்ளது. | மூலதன ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதி பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு கணக்கிலிருந்து குறைத்துக் காட்டப்பட வேண்டும். |
| (இ) | காணிப் பதிவேட்டின் படி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள காணிகள் 4,833 ஹெக்டயர்கள் உட்பட மொத்தக் காணிகளின் எண்ணிக்கை 156,838 ஹெக்டயர்களாக காணப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் 2,144 ஹெக்டயர்கள் (868 ஏக்கர் 6.9 பர்சஸ்களை கொண்ட 29 காணித் துண்டுகள்) மாத்திரம் பெறுமதி மதிப்பீடு செய்து அதன் பெறுமதி என ரூபா 905,285,000 தொகை நிதிக் கூற்றுக்களின் | பெறுமதி மதிப்பீடு செய்வற்காக காணிகளை நில அளவை செய்து நில அளவைப் படங்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும் அனைத்துக் காணிகளும் அவ்வாறு நில அளவை செய்திருக்கவில்லை. நில அளவை செய்யப்பட்ட குத்தகைக் காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. 2023.12.31 திகதியில் உள்ளவாறு குத்தகைக் காணிகளுக்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் கிடைத்துள்ள பெறுமதி மதிப்பீடு மாத்திரம் கணக்குகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி கிடைக்கும் விதத்தில் கணக்குகளில் உட்படுத்தல் மேற்கொள்ளப்படும் காணிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள காணிகள் மற்றும் அளவு, அகற்றப்பட்ட காணிகளின் எண்ணிக்கை மற்றும் மீதியான காணிகள் தொடர்பாக | சட்டத்தின் படி தனதாக்கிய காணிகளை உட்படுத்தி தயாரிக்கப்பட்ட காணிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் நியாயமான பெறுமதி கணக்குகளின் மூலம் சித்தரித்துக்காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது . அது 1.37 சதவீதமாக இருந்தது. அதன் படி காணிகளின் நியாயமான பெறுமதி கணக்குகளின் மூலம் சித்தரித்துக் காட்டப்படாததுடன், சரியான தன்மை மற்றும் அந்த காணிகளின் ஒட்டுமொத்த பெறுமதி தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியவில்லை. | தகவல்கள் உட்படுத்தப்பட்டுள்ளது. அந்த மீதியான காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்வற்காக கூகூல் தொகுதி இலக்க தகவல்களும் அந்த பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | காணி மறுசீரமைப்பு சட்டத்திற்கு இணங்க கம்பனிகளில் இருந்து மற்றும் தனியாரிடமிருந்து உரித்தாக்கப்பட்ட 1,010 காணிக் கோப்புக்களுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையின் ரூபா 215,622,362 தொகையான மீதி (கட்டம் - I மற்றும் II) தொங்கல் கணக்கு ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் காணப்படாததுடன், அவை மிகையான அல்லது குறைவாக ஒதுக்கம் ஒன்றாக இருக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டுள்ளது. | இந்த நட்டஈட்டுத் தொங்கல் கணக்கில் காணப்படும் மீதிகள் குறிப்பிட்ட கம்பனிகள் மற்றும் தனியாரினால் அந்தக் காணிகள் தொடர்பான அவர்களின் உரிமையை உறுதிப்படுத்திய பின்னரே தீர்க்கக்கூடியதாக உள்ளமையால் அவ்வாறு உரிமையை உறுதிப்படுத்திய நபர்களின் மாத்திரம் மீளாய்வாண்டின் போது உரிமையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தனியார்களிடன் உரித்தாக்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈடு சரியாக கணக்கீடு செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மொனராகலை, இரத்தினபுரி, புத்தளம் மற்றும் காலி ஆகிய மாவட்ட அலுவல கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் லிந்துல பங்களா கட்டிடம் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் | 2024 நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்காக நிதிப் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கட்டிடங்கள் மற்றும் காணிகள் ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

காட்டப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தெல்தொட பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்திற்காக தனதாக்கப்பட்ட காணியின் நட்டஈடு என ஆணைக் குழுவிற்கு ரூபா 4,742,500 இற்கான தொகையொன்று 2021 ஏப்ரல் 08 திகதி கிடைத்திருந்த போதிலும், அந்தப் பெறுமதி பெற வேண்டிய வருமானம் ஒன்றென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்தக் காணிக்குரிய நட்டஈட்டுத் தொகை தெல்தோட்டை பிரதேச செயலாளரிடம் கிடைக்கப் பெற்று வங்கியில் இடப்பட்டு மாவட்ட அலுவலகத்தின் மூலம் 2021.04.08 திகதி இந்த பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் காணிக்காக கிடைத்திருந்த நட்டஈட்டுத் தொகை பெற வேண்டிய நட்டஈட்டுத் தொகையொன்றென அந்த ஆண்டிலிருந்தே சமர்ப்பித்தல் ஏற்பட்டிருந்த தவறொன்றினால் ஆகும் என இனங்கண்டு 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிதிப் பிரிவு மற்றும் தனதாக்கல் மற்றும் நட்டஈட்டுப் பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் சரி செய்யப்பட வேண்டும். |
| (எ) | லிட்டில் வெலிவத்த காணியில் 8.974 ஹெக்டயர்கள் தனதாக்குவதற்காக தெல்தொட பிரதேச செயலாளரினால் நட்டஈட்டுத் தொகை என ரூபா 18,786,000 தொகை 2023 ஒக்தோபர் 11 திகதி ஆணைக் குழுவிற்கு செலுத்தியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்தப் பெறுமதி பெற வேண்டிய மீதியொன்றெனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தத் தவறு 2024 கணக்காண்டின் போது சரி செய்வதற்காக நிதிப் பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | வெலிகபொல பிரதேச செயலாளர் பிரிவில் குறுக்கு வெட்டு நில அளவைப்பட இலக்கம் 620142 வலையம் 02 துண்டு இலக்கம் 13 இல் 01 ஏக்கர் 03 ரூட் இற்கான ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியை தனதாக்குவதற்காக பெற வேண்டிய நட்டஈட்டு வட்டித் தொகையாகிய ரூபா 2,214,397 தொகையில் 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த நட்டஈட்டு | வெலிகபொல பொலிஸ் நிலையத்திற்கான காணிகள் தனதாக்கள் தொடர்பான கணிக்கப்பட்டிருந்த நட்டஈட்டு வட்டித் தொகை ரூபா 2,214,397 தொகையாகும். அந்த நட்டஈட்டு வட்டித் தொகையில் ரூபா 703,000 இற்கான தொகையொன்று 2023.01.09 திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீதியான கிடைக்க வேண்டிய நட்டஈட்டு வட்டித் தொகையாகிய ரூபா 1,511,398 இற்கான தொகைக்காக சமூகப் பாதுகாப்பு வரி மற்றும் பெறுமதி கூட்டிய வரியின் படி அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 2,610,221 தொகை எனவும், அதன்படி அறவிடப்பட வேண்டிய மீதித் தொகை ரூபா | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் சரியாக கணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி ரூபா 702,999 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் கிடைக்க வேண்டிய நட்டஈட்டு வட்டித் தொகை ஆகிய ரூபா 1,511,398 தொகை நிதிக் கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | 1,907,221 தொகை என வெலிகபொல பிரதேச செயலாளருக்கு 2023.03.08 திகதி கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, மிகையாக கணிக்கப்பட்டிருந்த ரூபா 395,823 இற்கான தொகை தொடர்பாக பிரதேச செயலாளரினால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன், இது வரை அந்த நட்டஈட்டுத் தொகையின் கொடுப்பனவு சம்பந்தமாக எமது நிறுவனத்திற்கு அறிவிக்கப்படவில்லை. இந்தத் தவரினை 2024 கணக்காண்டின் சரி செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் முல்கல்கெலேவத்த எனும் காணியில் மு.பி.நு.3362 இலக்கம் கொண்ட நிலஅளவைப் படத்தின் துண்டு இலக்கம் 02 இன் 0.4121 ஹெக்டயர் காணியை தனதாக்குவதற்கான நட்டஈட்டுத் தொகையாகிய ரூபா 18,900,000 தொகை 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டிய நட்டஈடு என இனங்கண்டிருந்த போதிலும் மேலதிக நட்டஈட்டுத் தொகையாகிய ரூபா 15,557,500 தொகை வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரி செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் சரி செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மொனராகல பிரதேச செயலாளர் பிரிவின் குமாரவத்த காணியின் 0.3582 ஹெக்டயர்கள் பிரதேச நிலஅளவை அலுவலகத்தினால் தனதாக்குதல் தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 4,954,000 இற்கான நட்டஈட்டுத் தொகை 2021 நவம்பர் 01 திகதி கிடைக்கப் பெற்று அதே ஆண்டில் கணக்கீடு | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த தவறை சரி செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் மற்றும் கடன்பட்டோர்கள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும், கடன்பட்டோரிலிருந்து அந்த மீதியை அகற்றாமையினால் மீளாய்வாண்டின் போது கடன்பட்டோர்கள் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | 2023 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மொத்த பெறுமதி மதிப்பீடு மீது சேவைக் கட்டண வருமானமாகிய ரூபா 5,374,478 தொகை குறிப்பிட்ட ஆண்டின் வருமானம் என இனங்கண்டிருக்காமல் மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை ஆண்டின் இலாபம் அந்த பெறுமதியினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த பெற வேண்டிய பெறுமதி மதிப்பீட்டு மற்றும் சேவைக் கட்டணம் முன்னைய ஆண்டுகளுக்கு உரியவையாக காணப்பட்ட போதிலும் தவறுதலாக மீளாய்வாண்டு வருமானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | கருங்கல் குத்தகைப் பேரேட்டின் படி 75 குத்தகையாளர்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 20 குத்தகையாளர் தொடர்பாக வருடாந்த குத்தகை வருமானம் என ரூபா 10,458,366 தொகை மாத்திரம் அட்டுரு அடிப்படையில் இனங்கண்டிருந்த போதிலும், மீதியான 55 குத்தகையாளர்கள் தொடர்பாக குறிப்பிட்ட அட்டுரு வருடாந்த குத்தகை வருமானம் கணிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | கருங்கற்கள் குத்தகைக்காக வழங்குதல் தொடர்பாக முறையான செய்முறையொன்று காணப்படாமையால் அவ்வப்போது பல்வேறு செய்முறைகளின் படி குத்தகைதாரர்களுக்கு அறிவுருத்தி குத்தகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. 2022.12.31 திகதி அளவில் அவ்வப்போது பெற்றுக்கொண்ட ஆணைக்குழுவின் தீர்மானங்களின் அடிப்படையில் உடைத்து அகற்றப்பட்டிருந்த மற்றும் எதிர்காலத்தில் உடைக்க வேண்டியுள்ள கியுப்களின் எண்ணிக்கையின் அடிப்படையாக வருமானப் பிரிவினால் 2022.12.31 திகதியில் உள்ளவாறு 17 குத்தகைதாரர் தொடர்பாக பேரேடுகள் தயாரித்திருக்கவில்லை. இந்த முறைமையிலும் எதிர் காலத்தில் உடைக்கவுள்ள கியுப்களின் எண்ணிக்கை தொடர்பாக அதாவது உடைத்து அகற்றப்படாமல் காணப்பட்ட கியுப்களின் எண்ணிக்கை அடிப்படையில் குத்தகை அறவீடு செய்யும் போது குத்தகைதாரர்கள் அசௌகரிகங்கள் | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடைவதெவும், கிடைத்துள்ள கோறிக்கைகளின் அடிப்படையில் 2023.09.15 திகதிய ஆணைக்குழுப் பத்திரத்தின் படி மேற்கூறிய தீர்மானத்திற்கு இணங்க அனைத்து கருங்கல் குத்தகைதாரர்கள் தொடர்பாக 2023.05.31 திகதி வரை உடைத்து அகற்றப்பட்டிருந்த கருங்கல் கியுப்களின் எண்ணிக்கை தொடர்பாக தகவல்கள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது. அதன்படி, குத்தகை பேரேடு தயாரிக்கும் சந்தர்ப்பம் அளவில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மூலம் குத்தகைதாரர்கள் 20 பேர் தொடர்பாக தகவல்கள் கிடைத்திருந்தமையால் அந்த தகவல்களின் அடிப்படையில் குத்தகை பேரேடு தயாரிக்கப்பட்டது. | |
| (க) | பெறவேண்டிய காணிகள் விற்பனவு வருமானத்தில் ஆணைக்குழுவிற்கு ரூபா 7,863,205 இற்கான தொகையொன்று கிடைத்திருந்த போதிலும் பெறவேண்டிய காணி விற்பனவு வருமானத்தில் இருந்து கழித்திருக்கவில்லை. | 2024 ஆம் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு உரிய பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | கிடைத்துள்ள வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ங) | ஆணைக்குழுவினால் தெங்குப் பயிர்ச்செய்கை சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த குருநாகல் மாவட்டத்தின் செரபீஸ்வத்த எனும் காணி தொடர்பாக வருடாந்த பெறுமான மதிப்பீடாகிய ரூபா 960,000 தொகை நிதிக் கூற்றுக்களில் ரூபா 760,000 தொகை என இனங்கண்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் குத்தகை வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 200,000 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு கணக்குகளில் சரி செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | வருடாந்த குத்தகை வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ச) | ஆணைக்குழுவினால் தெங்குப் பயிர்ச்செய்கை சபைக்கு உடன்படிக்கையொன்று இன்றி குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த 1,539 ஏக்கர் 02 ரூட் 38.81 பர்சஸ் காணி தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை குத்தகை வருமானம் என ரூபா 354,658,614 தொகை இனங்கண்டிருந்த போதிலும், மீதியான காணியின் எண்ணிக்கையாகிய 1,588 ஏக்கர் 11 பர்சஸ் தொடர்பான அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை எவ்வளவு என இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில் லை. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகள் நாட்டின் 10 மாவட்டங்கள் அடங்கக் கூடியவாறு எமது அறிக்கைகளின் படி 3,139 ஏக்கர் 01 ரூட் 16.11 பர்சஸ் தொகை குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. மேலும், விற்பனை அடிப்படையில் 21 ஏக்கர் 03 ரூட் 39.23 பர்சஸ் தொகையும் வர்த்தமானி மூலம் 32 ஏக்கர்களும் மற்றும் தனதாக்கல் மூலம் 936 ஏக்கர்கள் 00 ரூட் 11.45 பர்சஸ் இற்காக அளவு ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. இந்த காணிகள் நில அளவைகள் மேற்கொள்ளாமல் 1979 – 1980 ஆண்டுகளின் போது தெங்குப் பயிர்ச் செய்கைச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு நிலஅளவை அலுவல்கள் மேற்கொள்வதற்காக மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்ட காலம் எடுப்பதன் காரணமாக குத்தகைத் தொகையை அறிவிப்பதற்காக குறிப்பிட்ட காலமொன்று கடந்திருந்தது. தெங்குப் பயிர்ச்செய்கை சபையினால் மிகவும் சிறிய தொகையொன்று குத்தகையாக செலுத்தப்பட்டிருந்தது. திறைசேரியினால் வழங்கப்படும் ஏற்பாடுகளின் கீழ் பராமரிக்கப்படுகின்றதெனவும், பாரிய அளவொன்று குத்தகையாக செலுத்துவதற்கு இயலுமை காணப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பாசிகுடாவத்த காணி தொடர்பாக பெருந்தோட்ட தொழில் அமைச்சு, காணி மற்றும் சுற்றுலா அமைச்சு, தெங்கு பயிர்ச் செய்கைச் சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகியவற்றை பிரதிநிதிப்படுத்தி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. அந்தக் குழு முதல் தடவையாக 2024.05.21 திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் மேலதிக செயலாளரின் தலைமையில் கூடியிருந்ததுடன், அங்கு அமைச்சுக்களின் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கூடி இது தொடர்பாக கொள்கைசார் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2024.07.05 திகதிய விவசாய மற்றும் பெருந்தோட்ட தொழில் அமைச்சின் செயலாளர், சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளர் தலைமையில் | இனங்காணப்படாத குத்தகையை வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் நிலுவை குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அழைக்கப்பட்டிருந்த கலந்துரையாடலில் பெருந்தோட்ட தொழில் அமைச்சுச் செயலாளரினால் தெங்கு பயிர் செய்கைச் சபைக்கு நிலுவை குத்தகை தொகையை செலுத்தும் படியும் மற்றும் எதிர்காலத்தில் குத்தகை தொகையை விதிக்கப்பட்டவாறு செலுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கும் படியும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஞ) | தெங்குப் பயிர்ச் செய்கை சபைக்கு குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய பயன்படுத்தல் கட்டணம் என ரூபா 31,688,608 தொகை இனங்கண்டிருந்த போதிலும், பெறவேண்டிய மீதி ஒன்றென நிதிக் கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்காக உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தல் கட்டணம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ட) | பதுளை மாவட்டத்தில் கந்தகெடிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கல்பிடியவத்த எனும் காணியின் 4 ஏக்கர்களில் படிகக் கற்கள் உடனான காணி தொடர்பாக நிலுவை குத்தகைத் தொகை ரூபா 5,250,480 இற்கான தொகை அறவிடப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவிற்கு சொந்தமான கணிம காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது விஷேடமாக காரியம் மற்றும் படிக கணியங்கள் தொடர்பாக கணியம் மற்றுமன்றி காணி தொடர்பாகவும் குத்தகைத் தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. அதன்படி, இந்தக் காணிப் பகுதிக்கு 2012 ஆண்டு தொடர்பாக பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் படி வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 453,600 தொகையாக காணப்பட்டதுடன், அந்தத் தொகை 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டிய அடிப்படையில் 2023.09.13 திகதி வரை பெற வேண்டிய தொகை ரூபா 5,250,480 தொகை ஆக காணப்பட்டதுடன், இந்த தொகை தொடர்பாக சரியாக பேரேட்டில் பதிவு செய்யப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அச்சிடப்பட்ட குத்தகைப் பேரேட்டில் உட்படுத்துவதற்கு முடியாமல் போனதால் இந்தத் தவறு ஏற்பட்டுள்ளது. அது தற்போது சரி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த குத்தகைதாரர் இறந்துள்ளமையால் இந்தக் காணிப் பகுதி அவரின் மகனின் பெயரில் உரித்தாக்கித் தரும்படி விண்ணபித்திருந்தமையால் 2024.06.12 திகதி தரப்பினர்களை தலைமை அலுவலகத்திற்கு அழைத்து கலந்துரையாடப்பட்டதுடன், அங்கு குத்தகைத் தொகையில் 50 சதவீதம் | குத்தகைப் பேரேடு சரியாக தயாரிக்கப்படல் மற்றும் நிலுவைக் குத்தகை முறையான அங்கீகாரத்துடன் அன்றி நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படக் கூடாது. |

| | | |
|---|---|---|
| | | ஒரே தடவையில் செலுத்துவதற்கும் மீதித் தொகையை தவணைகளாக செலுத்துவதற்கும் இணங்கப்பட்டிருந்தது. அதன்படி, எதிர்காலத்தில் நிலுவைக் குத்தகை அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி அமைச்சு, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தொடர்பாக பெறவேண்டியுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,072,166,351 தொகை எனினும், அந்த நிறுவனங்களில் இருந்து ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படவில்லை என்று அறிவித்திருந்த போதிலும், அந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பெற வேண்டிய 36 குத்தகை மீதிகள் தொடர்பாக ரூபா 777,136,104 தொகை மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய 15 மீதிகள் தொடர்பாக ரூபா 6,305,291 இற்கான மீதிகளிற்காக உறுதிப்படுத்தல் கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாமையால் உண்மைத் தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிப் பிரிவு தொடர்பாக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக 24 கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவற்றில் 07 கடிதங்களுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கிடைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக மீதிகளுக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தொகை ரூபா 4,002,737,774 தொகைக்கான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் அடங்கியுள்ள 03 அரச நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய 30 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 2,126,952,139 தொகை மற்றும் 10 வருடங்களை | கடன் பட்டோர் தொடர்பாக 2024.05.30 திகதி ஆணைக்குழுவில் நடைபெற்ற குறிப்பிட்ட அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,068,913,697 தொகை அவர்களின் கணக்குகளில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் | அரச நிறுவனங்களுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகைத்துள்ள ரூபா 381,076,216 தொகைக்காக எதுவித ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. | பெயரில் கடன் பட்டோர் மீதியொன்று காணப்படவில்லை என அறிவித்திருந்தமையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை முறையொன்று எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதேபோல் தேர்தல் வட்டார கூட்டுறவு சங்கத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 5,073,663 இற்கான தொகை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் காணப்படும் கோப்புக்களை பரிசோதனை செய்து தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக அறிவுறுத்தப்பட்டது. அதேபோல் ஹதபிம அதிகாரசபையிலிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 54,911,756 இற்கான மீதி தற்போது காணிகள் சாட்டுதல் செய்யும் பிரிவிலிருந்து அறவிடப்பட்டு வருகின்றதெனவும் இவ்வாறு தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. காணி அமைச்சிலிருந்து ரூபா 3,252,654 இற்கான தொகை தொடர்பாக நி.பி. 104 மற்றும் 105 இன் படி விசாரணையொன்று மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டது.<br>பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,126,686 இற்கான தொகை அந்தக் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பதற்காக எமது நிறுவனத்தின் காணி சாட்டுதல் செய்யும் பிரிவிற்கு அனுப்பப்பட்டது. கூட்டுறவு சங்கங்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் படி 03 கூட்டுறவு சங்கங்களில் இருந்து தற்போது கிடைத்திருந்த தொகை ரூபா 189,451 ஆகும். | |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் பலவின கடன்பட்டோர்களின் கீழ் கழுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ள 08 காணித் துண்டுகளை குத்தகைக்கு பெற்றிருந்த ஆட்களிலிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,311,017 தொகை 24 வருடங்களை விட மிகையான | இந்த மீதியில் காணப்படும் 07 கடன் பட்டோர்களில் 06 பேர் அவ்வப்போது ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் பணம் அறவிடப்பட்டு காணி உறுதிகள் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு 2024.07.02 திகதிய பத்திர இலக்கம் 12788 கொண்ட பத்திரம் சமர்ப்பிக்கபட்டதுடன், அங்கு நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் | நிலுவை குத்தகை தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காலம் முதல் நிலுவையாக காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் அவதானிப்புக்களுடன் மீண்டும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் படி தீர்மானிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 11,322,992 தொகைக்கான காணிகள் விற்பனவு முற்பண மீதியில் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பேணப்பட்டு வந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 11,202,992 இற்கான மீதிகள் மற்றும் கூட்டுத்தொகையில் ரூபா 14,080,850 தொகைக்கான காணி குத்தகை முற்பணக் கணக்கு மீதியில் அடங்கியுள்ள 269 நபர்களிடமிருந்து பெற்றிருந்த ரூபா 11,215,850 இற்கான முற்பணத் தொகை 18 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காணிகளை சட்டரீதியாக விற்பனை செய்வதற்கு, குத்தகைக்கு கொடுப்பதற்கு அல்லது முற்பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த காணி விற்பனை முற்பணம் அனேகமாக 2002 – 2004 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த காணி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானவையே. தற்போது அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் இவ்வாறு தீர்க்கப்பட்டிருக்காத முற்பணக் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அக்காலப்பகுதியில் சாட்டப்பட்டிருந்த 219 காணிகளில் 11,942 ஏக்கர் தொடர்பான காணி எண்ணிக்கையில் தற்போது செழிப்பாக பயிர்ச் செய்யப்பட்டுள்ள 1,156 ஏக்கர் காணிளை பரிசோதனை செய்து விடயங்களை உறுதிப்படுத்தி 2022.02.17 திகதிய 11738 ஆணைக்குழுத் தீர்மானத்தின் மூலம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக வரைபு தயாரிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரம் 2022.04.20 திகதி காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. | விற்பனவு முற்பணங்கள் மற்றும் காணி குத்தகை முற்பணங்கள் தீர்த்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1972 இன் 01 இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் பிரிவு 44(ஔ) | ஆணைக்குழுவினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஆட்களுக்காக சேமலாப நிதியம் ஒன்று | காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரிவு 44(ஔ) பிரகாரம் 1982 – 1984 காலப் பகுதிகளில் ஊழியர்கள் | சட்டத்தின் விளக்கத்தை உரிய முறையில் வரைவிளக்கணம் செய்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்படுத்துதல் மற்றும் நலனோம்பு, களியாட்ட விளையாட்டு வசதிகள் வீடமைப்பு மற்றும் விடுதி மற்றும் ஏனைய வசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவின் இடையறாமல் 05 வருடம் சேவையாற்றிய ஊழியர்களுக்கு ஒரு பர்சஸ் காணி ரூபா 1,000 பெறுமதியில் 20 பர்சஸ் வீதம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2009 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 396 உத்தியோகத்தர்களுக்கு 49 ஏக்கர் 35.64 பர்சஸ் காணி வழங்கப்பட்டிருந்தது. | அடிப்படையின் மீது காணிப் பகுதிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டின் பின்னர் கொள்கை சார் தீர்மானத்தின் படி பிரதேசம் எதுவாக இருந்தாலும் வழங்கப்படுவது சமமான காணி அளவொன்றே ஆகும். காணிப் பகுதிகள் பெற்றுக்கொள்வதற்காக அடிப்படை தகைமைகள் என கவனிக்கப்பட்டது ஆணைக்குழுவில் இடையறாத சேவைக்காலம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலங்கள் மற்றும் ஒழுக்கத்திற்கு மாற்றமாக விடயங்களில் சம்பந்தப்படாத ஒருவராக இருக்க வேண்டும். 2020.09.16 நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின் போது 05 வருடங்கள் பூர்த்தி செய்துள்ள சேவைக் காலத்தையுடைய காணிப் பகுதிகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக காத்திருக்கும் பதிவேடொன்றின் மீது மேற்கொள்ளும் படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 16 | ஆணைக்குழுவினால் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டத்திற்காக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 367,625 தொகையொன்று | ரூபா 367,625 இற்கான தொகை சேதனப் பசளை செயற்திட்டம் தொடர்பாக 2022 ஆண்டு ஜனவரி முதல் ஜுலை வரை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகையாகும். | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பணம் அனுப்பப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அந்த நிதியத்திற்கு செலவு வைக்காமல் ஆணைக்குழுவின் 2023 நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியொன்றென காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட அறிக்கைகள் மீண்டும் தயாரிக்கப்பட்டு 02 வாரங்களுக்குள் இந்த நிதியங்களுக்கு பங்களிப்புச் செய்ய வேண்டிய ஊழியர்களை இனங்கண்டு அவர்களின் பெயரில் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்படும். | |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 | நிதி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் நிறுவனத்தில் காணப்படும் மேலதிக பணம் மீள்கொள்வனவுகளின் கீழ் முதலீடு, திறைசேரி ஊழியர்கள், நிலையான வைப்புக்கள் அல்லது வேறு ஏதேனும் முதலீடுகளில் முதலீடு செய்யக் கூடியதாக இருந்த போதிலும் 2023 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,540,580,496 தொகைக்கான முதலீடுகளுக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக குறுகிய கால அரச வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளரினால் அரச தொழில் முயற்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்காக இதுவரை பதில் ஏதும் கிடைத்திருக்கவில்லை. | முதலீடுகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரிமாணம் 1645(அ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான 12 வாகனங்களின் வாகன சம்பவ குறிப்பேடு உரிய முறையில் நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | ஆணைக்குழுவின் வாகன தேக்கத்திற்கு சொந்தமான 15 வாகனங்கள் காணப்பட்டதுடன், அவற்றின் 03 சம்பவக் குறிப்பேடுகள் நிரப்பப்பட்டுள்ளது. கணக்காய்வுத் திகதியளவில் ஏனைய 12 சம்பவக் குறிப்பேடுகளின் ஒரு மாதத்தினுள் நாளதுவரை ஆக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என முகாமைத்துவ மற்றும் மனித அபிவிருத்தி பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வாகன சம்பவக் குறிப்பேடுகள் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் V பந்தி 1.1 | தாபனக் கோவைக்கு முரணாக 2020 ஒக்தோபர் 23 திகதி முதல் 2022 மார்ச் 31 திகதி வரை ஆணைக்குழுவின் செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் போது 2021 ஜனவரி 01 திகதி முதல் மகநெகும வீதி நிர்மாணித்தல் இயந்திர உபகரணக் கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்காக ஒரு வருட தகுதிகான் காலத்தின் கீழ் நிரந்தர அடிப்படையின் மீது சேவைக்கு சேர்த்தப்பட்டு ஒரே காலப் பகுதியில் 02 நிறுவனங்களில் இருந்தும் சம்பளங்கள் மற்றும் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, ஆணைக்குழுவினால் குறிப்பிட்ட உத்தியோகத்தரின் வரவு மற்றும் அவரால் வழங்கப்படும் சேவை தொடர்பாக கவனம் செலுத்தாமல் சம்பளம் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,038,979 இற்கான தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | ஆணைக்குழுவினால் செயற்திட்ட பணிப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை தொடர்பாக 2023.06.23 திகதிய சட்டமா அதிபருக்கு அனைத்துத் தகவல்களும் அடங்கிய கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. மேலும், அதற்கு பதில் கிடைக்காமையால் மீண்டும் 2024.01.10 மற்றும் 2024.04.22 திகதிகளிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டது. மேலும், இது தொடர்பாக இலங்கை சட்டவரைஞர் சங்கம் 2024.05.08 திகதி கடிதம் ஒன்று அனுப்பி இரண்டு அரச நிறுவனங்களுக்கு இடையான சிக்கலாக காணப்படுவதனால் அரச நிறுவனங்களில் காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் தகைமையுடைய நடவடிக்கை எடுத்தல் பொருத்தம் என அறிவிக்கப்பட்டிருந்தது. அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | மிகையாக செலுத்திய சம்பளம் மற்றும் படிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலக்கம் 22/பலவின(063) மற்றும் 2022 நவம்பர் 22 திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் ஜனாதிபதி சிரேஷ்ட உதவிச் செயலாளரின் 2023 மே 25 திகதிய இலக்கம் PS/PSB/AS-02/LAND/2023 கொண்ட கடிதம் | காணிகளை அகற்றுதல் தொடர்பாக அனைத்து அலுவல்களும் உடனடியாக செயற்படுமாறு தற்காலிமாக இடைநிறுத்துவதற்கு ஜனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடிதத்தின் விதிகளை மிகைத்து 2023 மே 25 திகதியின் பின்னரர் 714 ஏக்கர் 05 ரூட் 8.57 பர்சஸ் காணி அகற்றப்பட்டிருந்தது. | PS/PSB/AS-02/LAND/2023 இலக்கம் மற்றும் 2023.05.25 திகதிய கடிதத்தின் மூலம் ஆணைக்குழுவினால் அகற்றப்படுகின்ற காணிகளை உடனடியாக நிருத்துமாறும் காணிகளை அகற்றுவது தொடர்பாக ஏதேனும் கருமங்கள் | காணிகளை அகற்றுவதற்கான முறையான அங்கீகாரத்தின் படி செயற்பட வேண்டும். |

நிறைவேற்றப்படின் ஜனாதிபதி செயலகத்திற்கு அறிவுருத்தும் படியாகும். அதன்படி ஆணைக்குழுவினால் காணிகள் அகற்றப்படுகின்ற சந்தர்ப்பம் தொடர்பாக 2023.06.02 மற்றும் 2023.06.22 ஆகிய திகதிகளில் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஆலோசனைகள் வேண்டப்பட்ட போதிலும் அது தொடர்பாக அறிவுரை ஏதும் கிடைக்கவில்லை. காணி அமைச்சரின் கடிதத்தின் படி நியதிச் சட்ட ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் ஆணைக்குழுவிடம் காணப்படும் காணிகளின் வதியும் மற்றும் அனுபவிக்கும் ஆட்களை சட்டரீதியாக்குவதற்கான அறிவுரை மீது சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் மேலதிக செயலாளர் (காணி) இனால் தலைவருக்கு அனுப்பியிருந்த கடிதத்தின் படி ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளில் வதியும் மற்றும் அனுபவிக்கும் ஆட்களுக்காக காணி உறுதிகள் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. விடயம் அவ்வாறு இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட 2023.05.25 திகதிய கடிதம் ஆணைக்குழுவிற்கு கிடைக்க முன்னர் ஆணைக்குழுவினால் உரியவாறு

நிலஅளவை செய்தல், பணம் அறவிடல் மற்றும் ஆணைக்குழு தீர்மானம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த காணிகளை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தக் காலப் பகுதியில் புதிய காணிகளை அகற்றுவதற்கான தீர்மானம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 636,050,744 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 518,199,960 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 117,850,784 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நிதி வருமானம் ரூபா 175,750,004 தொகையினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களில் போக்குப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது காணி குத்தகை வருமானம் மற்றும் நிலையான வட்டி வருமானம் முறையே 09 சதவீதத்தினால் மற்றும் 113 சதவீதப் பெறுமதிகளினால் அதிகரிக்கும் போது காணிகள் தனதாக்கல் வருமானங்கள், காணிகள் விற்பனை வருமானங்கள், காணி பயன்பாட்டுக் கட்டண வருமானம் முறையே 09 சதவீத்தினால், 30 சதவீதத்தினால் மற்றும் 39 சதவீத பெறுமதிகளினால் குறைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போக்குவரத்துப் படி மற்றும் மோட்டார் வாகன வாடகை செலவுகள் முறையே 25 சதவீதத்தினால் மற்றும் 89 சதவீதத்தினால் குறைந்திருந்த போதிலும் மோட்டார் வாகன திருத்த வேலைச் செலவுகள், மேலதிக நேர கொடுப்பனவு, ஊழியர் பணிக்கொடை மற்றும் நன்கொடைகள் முறையே 55 சதவீதத்தினால், 104 சதவீதத்தினால், 43 சதவீத்தினால் மற்றும் 56 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் நடைமுறை விகிதாசாரம் 4:1 தொகையாக இருந்ததுடன், 2022 ஆண்டில் அந்த விகிதாசாரம் 23:1 ஆக இருந்தது. அதன்படி, நடைமுறை விகிதாசாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைந்த பெறுமதி ஒன்றில் பேணிச் சென்றிருந்த போதிலும் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டை விட மிகையாக நடைமுறைச் சொத்துக்களில் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2022 ஆண்டில் 11 சதவீதமாக காணப்பட்ட தேர்வு விகிதாசாரம் மீளாய்வாண்டின் போது 34 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும், ஆணைக்குழுவினால் மொத்தப் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக தேவையான எண்ணிக்கையை விட உரிமை மூலதனம் ஒன்று பேணிச் சென்றிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் 2021 மார்ச் 15 திகதிய நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 2021/01 இன் (உ) பிரிவின் படி 2015 ஜனவரி 01 திகதியின் பின்னர் அனைத்து புதிய அங்கீகாரமற்றோரை வெளியேற்ற வேண்டியிருந்ததுடன் இலக்கம் 22/பலவின(063) மற்றும் 2022 நவம்பர் 22 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி காணிகளை அகற்றுதல் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக முன்னேற்றப்படாத பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 920,000 இற்காக பதுளை மாவட்டத்தில் ஹல்தமுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள முதுவானவத்த காணியில் துண்டு இலக்கம் 1 இல் 02 ஏக்கர் 7.22 பர்சஸ் இற்கான காணியில் அங்கீகாரம் அற்ற வதிவோருக்கு விற்பனவு செய்வதன் மூலம் சாட்டப்பட்டிருந்தது. | முதுவானவத்த காணியில் வெளிக்களத்தில் சுதந்திரமாக காணப்படும் மற்றும் தற்போது பயன்படுத்தப்படும் காணிப்பகுதிகளை இனங்காண்பதற்காக 2022.01.05 திகதியுடைய நில அளவை கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காணியின் உரிமையாளர் ஒருவரான ரஸல் பர்னாண்டோ என்பருக்கு சொந்தமான காணிப்பகுதி மற்றும் ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளின் எல்லைகளை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்த போது மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரினால் கொள்வனவு செய்திருந்த காணி அளவினுள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான முதுவானவத்த காணியில் 7 ஏக்கர் 2 ரூட் 24.92 பர்சஸ் உட்பட அனுபவித்து வருவது என நில அளவைப்பட இலக்கம் 439 மற்றும் 2022.02.15 திகதிய நில அளவைப் படத்தின் மூலம் இனங்காணப்பட்டிருந்தது. முன்னர் அதனை நில அளவை செய்த போது நில அளவையாளரினால் ஏற்பட்டிருந்த தவறு ஒன்றெனவும் ஆணைக்குழுவினால் சாட்டுதல் செய்யப்படுவதற்காக முறையான செய்முறை ஒன்றின் கீழ் அந்தக் காணிப் பகுதியை கொள்வனவு செய்வதற்கு விருப்பம் தெரிவித்து கோறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அங்கு விண்ணப்பதாரரினால் சுற்றுலா துறையை மையமாக கொண்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும், அந்தக் குறிக்கோளுக்குரிய விடயம் தொடர்பான காணிப்பகுதியை உரித்தாக்குவதற்கு அறிவுரை வினவி ஆணைக்குழப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அரச பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரினால் தற்போது முன்னேற்றப்படாத பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அறவீடு செய்து 22(1) ஆ ஆ பிரிவுகளின் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் விற்பனை மூலம் உரித்தாக்கிக் கொடுப்பதற்கு 2022.09.21 திகதி ஆணைக்குழு அங்கீகரித்திருந்தது. | காணிகளை அகற்றுவதற்காக முறையான செய்முறையொன்றின் மூலம் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரிச் செயலாளரின் 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட அரச செலவுக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் 2 பிரிவிற்கு இணங்க கட்டிடங்களை வாடகைக்கு எடுத்தல் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் 07 மாவட்ட அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பேணிச் செல்வதற்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகள் தொடர்பாக குத்தகை என ரூபா 49,571,072 தொகை செலவிடப்பட்டிருந்தது.<br>அதேபோல், ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 50 வருடங்களை அண்மித்திருந்த போதிலும் ஆணக்குழுக்கு சொந்தமான கட்டிடங்களில் அலுவலகங்களை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாமல் இருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. | மாவட்ட பணிப்பாளரினால் அரச கட்டிடங்களில் இட வசதிகள் பெற்றுக்கொள்ள முடியாது என அறிவித்திருந்த பின்னர் வாடகை அடிப்படையில் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் 03 மாவட்ட அலுவலகங்கள் ஆணைக்குழுவிற்கு சொந்தமான கட்டிடங்களில் நடாத்தப்பட்டு வருவதுடன் மேலும் 10 மாவட்ட அலுவலகங்கள் அரச கட்டிடங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது. | அரச செலவுக் கட்டுப்பாட்டுச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமாக காலி குருந்துகஹ ஹெதக்ம 31.5 பர்சஸ் இற்கான காணியுடனான கட்டிடத்தில் ஆணைக்குழுவின் காலி மாவட்ட அலுவலகம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் காலி நகர அண்மையில் அமைந்துள்ள 9.79 பர்சஸ் இற்கான கட்டிடம் ஒன்றில் ரூபா 65,000 இற்கான மாதாந்த குத்தகைக்கு பெற்று பேணிச் செல்லப்படுகின்ற காரணத்தினால் 2018 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்பட்டிருந்த கட்டிட வாடகையாகிய ரூபா 4,870,000 தொகை விளைவற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | 2018 ஆண்டில் உப அலுவலகம் என இந்த இடம் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், காலி நகரத்திலிருந்து 39 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் ஏனைய கடமை அலுவல்களுக்கும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது என அவதானிக்கப்பட்டது. | கிரயம் குறையக் கூடிய விதமாக செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவைக் காணி குத்தகைப் பெறுமதி ரூபா 1,180,434,743 இற்காக 401 குத்தகைதாரர்கள் இருந்ததுடன், அவற்றில் 116 குத்தகையாளர்களுக்கு மாத்திரம் குத்தகை உடன்படிக்கை | 2023.12.31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குத்தகை தொகை தொடர்பாக 403 குத்தகையாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த எண்ணிக்கையில் குத்தகை செலுத்தப்படாமைக்காக அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய குத்தகைதாரர்கள் 246 ஆக | குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்காக சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு அனுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வழங்கப்பட்டிருந்ததுடன், நிலுவை குத்தகையாகிய ரூபா 904,486,633 இற்கு உரிய 285 குத்தகைதாரர்கள் சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு அணுகாமல் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நிலுவை குத்தகைத் தொகையில் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி 13 சதவீதம் மற்றும் மீளாய்வாண்டின் வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட பெறுமதி 30 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி, சட்டரீதியான உடன்படிக்கைகள் இன்றி குத்தகைக்கு கொடுத்திருந்தமையால் நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடியாதுள்ளது.

காணப்பட்டது. வருடாந்த மற்றும் தவணை அடிப்படையில் குத்தகையை அறவீடு செய்வதற்குரிய குத்தகையாளர்கள் 157 பேர் காணப்பட்டனர். குத்தகை அறவிடப்படாத சட்ட செயற்பாட்டின் மூலம் விரைவாக அறவிடப்படுவதற்காக மேலும் வகைப்படுத்தப்பட்டு அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(உ) காணி மறுசீரமைப்பு சட்டத்திற்கு இணங்க தனியார் கம்பனி ஒன்றிற்கு சொந்தமான தெம்பல் ஸ்டோ வத்த காணி 1974 ஜூலை 09 திகதி உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்பின் படி 439 ஏக்கர் 02 ரூட் 03 பர்சஸ் அளவு 1993 நவம்பர் 23 திகதி மீண்டும் அனுபவிப்பினை கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனிக்கு 1974 இல் இருந்து 1993 வரையான காலத்திற்காக அவர்கள் இழந்த வருமானம் மற்றும் இழந்த நட்டங்களுக்காக வட்டி தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழங்கியிருந்த கட்டளையை நிறைவேற்றாமையால் 2001 ஆண்டு செலுத்த வேண்டிய தொகையாகிய ரூபா 100 மில்லியன் தொகையினை அந்தக் காலத்தில் செலுத்தாமையால் அந்தத் தொகைக்கு வருடாந்த வட்டியும் சேர்த்து ரூபா 500 மில்லியன் தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதன்படி, ரூபா 400 மில்லியன் தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது என

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு எதிராக தனியார் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மற்றும் அதனொடு தொடர்புடைய 05 வழக்குகளுக்காக நட்டம் ஆக நட்டத் தொகையை செலுத்தும் படி (means and profites) குறிப்பிட்ட அந்த மாவட்ட நீதிமன்றத்தினால் 2001.02.23 திகதி தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், வட்டியை செலுத்துவதற்கு அதன் மூலம் தீர்ப்பு வழங்கியிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த தீர்ப்பு மீது திருப்தியடையாத மேற்கூறிய வழக்குகளின் முறைப்பாட்டாளர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இறுதி மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக ஆணைக்குழுவினால் மீள் மேன்முறையீடு மற்றும் திருத்த கோறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அனைத்து கோறிக்கைகளையும் கவனத்தில் எடுத்து நட்டத்திற்கு 100 சதவீத வட்டியொன்றும் அதன் மீது சட்டரீதியான வட்டியொன்றும் செலுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்தது. கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கூறிய 2006.02.20 தீர்ப்புக்கு எதிராக SC/SPL/LA/78/2006 கொண்ட மேன்முறையீட்டிற்கான அங்கீகாரத்திற்காக எமது நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தொடர்ச்சியாக நீதி மன்றத்தில் மற்றும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட

முறையான செய்முறை ஒன்றின் மூலம் சிக்கலற்ற உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | கலந்துரையாடல்களின் பின்னர் ரூபா 208 மில்லியன் தொகை கழிக்கப்பட்டு ரூபா 500 மில்லியன் தொகை செலுத்துவதற்காக ஏற்பட்டிருந்த இணக்கப்பாடு அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இலக்கம் 12515 கொண்ட ஆணைக்குழுப் பத்திரத்தின் மூலம் 2023.12.20 திகதி ஒன்றுகூடிய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அங்கீகரித்திருந்தது. சட்டமா அதிபரின் அறிக்கையொன்று அழைப்பதன் அடிப்படையில் இந்த இணக்கம் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான கொள்கைசார் தீர்மானமொன்று எடுப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2024.04.24 திகதி ரூபா 500 மில்லியன் தொகை முறைப்பாட்டாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | |
| (ஊ) | ஆணைக்குழுவின் ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று 2019 மே 22 திகதி தனியார் நிறுவனமொன்றில் இருந்து ரூபா 8,500,000 தொகைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தத் தகவல் முறைமையின் மூலம் பெற வேண்டிய காணிக் குத்தகை தொகை தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் முடியாமல் இருந்தது. | MIS தகவல் முறைமையின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக Science Land Information Technology (Pvt) Ltd நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக் கூட்டம் கூடியதுடன், அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் TOR இன் படி கூடிய விரைவில் தகவல் முறைமையின் மூலம் பெற வேண்டிய காணிக் குத்தகைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு முடியுமானவாறு MIS தகவல் முறைமையை தயாரித்துத் தருவதாக இணங்கியிருந்தது. அதன்படி, தற்போது கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக முறைமை தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இது தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | ஒன்றித்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ஆணைக்குழுவிற்காக முழுமையான ஒன்றித்த கணினி முறைமையொன்று தயாரித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக 2002 ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 17,000,000 இற்கான தொகையினை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கும் படி 2022 அரச தொழில் முயற்சிகள் குழுவிற்கு அறிவித்த போதிலும் அதன்படி செயற்படுவதற்கு இந்த அறிக்கை திகதி வரை | இந்த முறைகேடு தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த முறைகேடுகள் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது எனவும், இது தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் செய்திருந்த போதிலும் அவர்களினாலும் இலஞ்ச சட்டத்தின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிப்பதற்கு போதியளவு விடயங்கள் காணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழு இது தொடர்பான தகவல்களை கணக்காய்வு | பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015.07.07 திகதிய நடைபெற்ற 670 ஆவது ஆணைக்குழு கூட்டத் தவணையில் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஆணைக்குழுவினால் இது தொடர்பான முழுமையான அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு, பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக காணி அமைச்சின் மூலம் திறைசேரிக்கு 2016.06.21 திகதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது வரை திறைசேரியிலிருந்து பதில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2022.10.21 திகதி நடைபெற்ற சந்தர்ப்பத்திலும் முழுமையான அறிக்கையொன்று பொது முயற்சிகள் மீதான குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சுச் செயலாளருக்கு கட்டளை இடப்பட்டது. அதன்படி, கணினி முறைமை நிறுவும் போது ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பாக அனைத்துத் தகவல்களும் 2023.05.18 திகதி நடைபெற்ற 790 ஆவது ஆணைக்குழுக் கூட்டத் தவணையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ஆலோசனைகள் வேண்டி 2023.08.24 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், இது வரை பதில் கிடைத்திருக்கவில்லை. | |
| (ஏ) | ஆணைக்குழுவினால் காணிகள் நிலஅளவை செய்யப்பட்டு வதிக்கப்பட்டவாறு ஆக்கும் சந்தர்ப்பத்தில் காணித் துண்டுகள் பெறுவோரிடம் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் நிலஅளவையாளர்களுக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,229,487 இற்கான தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 7,616,274 தொகை மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறு மேலும் பெற வேண்டிய மீதி ரூபா 25,613,213 தொகை காணப்பட்டது. | காலி மாவட்டத்தில் விஷேட செயற்திட்டம் என ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களுக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ஆணைக்குழுவினால் நில அளவைக் கட்டணம் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,229,487 தொகையில் 2023.12.31 திகதி அளவில் ரூபா 25,613,211 தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அதில் ரூபா 1,081,472 இற்கான தொகையொன்று 2024.06.30 திகதி மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2024.06.30 திகதி அளவில் ரூபா 24,531,739 தொகையொன்று மீளளிப்புச் செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. தற்போது நில அளவை செய்யப்பட்டுள்ள சில காணிகள் தொடர்பாக CA(W)399/2022 கீழ் நமுனகுல பெருந்தோட்டக் கம்பனியினாலும் CA(W)161/2021 கீழ் தலவாக்களை பெருந்தோட்ட கம்பனியினாலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவை பிரதிவாதியாக ஆக்கி | காணித் துண்டுகள் பெறுவோருக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிள அலவை செய்து கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மனுதாரர் கம்பனகளினால் ஆணைக்குழுவிற்கு எதிராக தடைக் கட்டளை பெற்றுக்கொண்டிருத்தல், 2019 ஆண்டு முதல் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையில் காணித் துண்டுகள் கிடைக்கப் பெற்றவர்கள் பணம் செலுத்துவதற்கு முன்வராமை ஆகிய விடயங்கள் இந்த நிதி அறவீடு தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் காணித் துண்டுகளை பெற்றவர்களுக்கு பணம் செலுத்தும் படி அறிவித்து அந்தப் பணம் அறவீடு செய்யும் படி காணிப் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான நாவலப்பிட்டி டில்டன் வத்த காணியில் தேயிலைத் தொழிற்சாலையுடன் 02 ஏக்கர் 01 ரூட் 05 பர்சஸ் அளவான காணி முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் 1997 ஆகஸ்ட் 30 திகதி முதல் வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 270,000 வீதம் தனியார் கம்பனி ஒன்றுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2008 ஆண்டின் போது தனியார் தரப்பினர் ஒருவரினால் மேற்கூறிய நிறுவனத்தின் வியாபார பெயருடன் காணியை உரித்தாக்கியிருந்த போதிலும் இது தொடர்பாக அங்கீகாரம் ஒன்று மற்றும் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் அறவீடொன்றின்றி முறைசாரா விதமாக அனுபவிப்பதற்காக ஆணைக்குழுவினால் இடமளிக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதி வரை 26 வருட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய குத்தகை தொகை ரூபா 18,403,926 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டியில் அமைந்துள்ள டில்டன் வத்த எனும் காணியில் 02 ஏக்கர் 01 ரூட் 05 பர்சஸ் அளவொன்று 30 வருடங்களுக்காக வ/ப சுப்பர் இன்டஸ்ரீஸ் அன்ட் எக்ஸபோர்ட் தனியார் கம்பனிக்கு சாட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2008 ஆண்டின் போது திலக் குமார உடுகம என்பவரினால் இக் காணிப் பகுதி உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆண்டு வரை குத்தகை செலுத்தாமையால் நாவலப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் இலக்கம் 79899/18 மற்றும் 2021.03.26 திகதிய வழக்குத் தீர்ப்புப் படி திலக் குமார உடுகம அவர்களை இந்த ஆதனத்திலிருந்து வெளியேற்றுவதற்காக கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. நிலுவைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக சட்டப் பணிப்பாளரிடம் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபரின் திறன்தொழில் சேவையை பெற்றுக்கொள்வதற்காக சட்டப் பணிப்பாளரினால் 2024.01.10 திகதி சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. | நிலுவை குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | காலி அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லட்சமி பீ வத்த எனும் காணியில் 08 ஏக்கர்கள் 30 வருட காலத்திற்காக ‘‘மன்றமொன்றிற்கு’’ குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு | காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லட்சமி பீ வத்த எனும் காணியில் இருந்து ஸஹன சிறுவர் அபிவிருத்தி மன்றத்திற்கு 08 ஏக்கர் காணி 2005.01.01 திகதி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2022.12.31 திகதியில் உள்ளவாறு | உரித்தாக்கப்பட்ட காணி, சட்டத்தின் குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட வேண்டியதுடன், நிலுவை குத்தகையை அறவீடு |

| | | | |
| --- | --- | --- | --- |
| | காணியின் அனுபவித்தல் ஒரு பக்க சார்பாக ஆணைக் குழுவிற்கு 2021 ஆண்டில் உரித்தாக்கபட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 6,998,800 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 6,998,800 ஆகும். 2005 முதல் இதுவரை குத்தகைத் தொகை செலுத்தப்பட்டிருக்காததுடன், பெறுமதி மதிப்பீடு மற்றும் சேவைக் கட்டணம் தொடர்பாக ரூபா 50,000 தொகை ஒன்று 2005.08.15 திகதி செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த மதகுரு 2020.05.18 திகதி காலஞ் சென்றிருந்தார். அதன்படி, இந்த நிலுவைக் குத்தகை தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 101(1),(2) மற்றும் (3) இன் படி நடவடிக்கை எடுத்தல் பொருத்தம் என 2022.03.02 திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த மதகுரு காலமாவதற்கு முன்னர் இந்தக் காணியிலிருந்து 03 ஏக்கர் அளவு விக்ரமசிங்க என்ற பெயருள்ள நபருக்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் இந்த 03 ஏக்கர்களில் அகாவுட் பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்தவுடன், குத்தகை தொகைக்கு சம விகித தொகையொன்று அவர்கள் செலுத்த விருப்பம் தெரிவித்திருந்தனர். அதன்படி, அவர்கள் அனுபவித்து வந்த பகுதியை குத்தகை அடிப்படையில் அவர்களுக்கு வழங்குவதற்கும் மீதியான 05 ஏக்கர்களில் அதில் அடங்கியுள்ள கட்டிடங்களும் உட்பட ஆணைக் குழுவிற்கு உரித்தாக்குவதற்கும் மதகுரு காலஞ் சென்றிருப்பதால் அவரினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து பெற வேண்டிய குத்தகை தொகைக்கு பதிலீடு செய்து கட்டிடங்களுடன் வேறு தகைமையுடைய குத்தகைதாரர் ஒருவருக்கு வழங்குவதற்கு ஆணைக்குழுவின் ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான கழுத்துறை மாவட்டத்தில் ஹொரண பிரதேச செயலகப் பிரிவில் மாஹேன வடக்கு 615பீ கிராம சேவகர் பிரிவிற்கு சொந்தமான காணியில் பகிரப்படாத 14 ஏக்கர் 01 ரூட் 9.9 பர்சஸ் இற்கான காணியில் அங்கீகாரம் இன்றி மதகுரு ஒருவர் 05 ஏக்கருக்கு அண்மித்த அளவொன்றும், வேறொரு தனியார் காணி உரிமையாளர் 66 | கழுத்துறை மாவட்டத்தில் ஹொரண பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஹேகல்லவத்த காணியை இனங்காண்பதற்காக இலக்கம் 15/06/3626 மற்றும் 2021.05.21 திகதிய நில அளவைக் கட்டளையின் படி நில அளவை மேற்கொண்டு இலக்கம் 1581 மற்றும் 2021.07.22 திகதிய நில அளவைப்படம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நில அளவையின் போது தற்போது சுஜாதா வீரகோன் என்பவர் உரிமை பாராட்டும் பங்களா உட்பட 66 பர்சஸ் பகுதிக்கு | அங்கீகாரமற்ற அனுபவிப்பவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பர்சஸ்களுக்கு மிகையான எண்ணிக்கையொன்றும் அனுபவித்து வருவதுடன், 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரிவு 16 இற்கு இணங்க அங்கீகாரமின்றி அனுபவிப்பவர்களை வெளியேற்றுவதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிகமாக ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை அங்கீகாரம் இன்றி அனுபவிக்கப்படுகின்றது என கண்டறியப்பட்டதுடன், அந்தப் பகுதி 1581 நில அளவைப் படத்தின் துண்டு இலக்கம் 08 என காட்டப்பட்டுள்ளது. எனினும், சுஜாதா வீரகோன் இனால் தற்போது CA(W)576/2021 கொண்ட வழக்கு ஆணைக்குழுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் அந்த அங்கீகாரமற்ற செயற்பாடு தொடர்பாக அதுவரை நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு முடியாது இருந்தது. பொதுமக்கள் மற்றும் பிக்குகள் சமூகத் தலைவர் பயிற்சி நிலையம் ஒன்றிற்காக இஸிபதனாராமபதி சங்கைக்குரிய கௌரவ ரன்ஜும் தென்னே தம்ம ரன்ஸி பிக்குவினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கோறிக்கையின் படி 1581 நில அளவைப்படத்தின் மூலம் 04 ஏக்கர் 02 ரூட் 00 பர்சஸ் சிக்கலற்ற காணிப் பகுதியொன்றை ஆணைக்குழுவின் பெயரில் நில அளவை மேற்கொள்வதற்காக இலக்கம் 15/06/3626 மற்றும் 2021.11.08 திகதிய நில அளவைக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. எனினும், சுஜாதா வீரகோன் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இலக்கம் CA(W)576/2021 கொண்ட வழக்கு ஆணைக்குழுவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் நில அளவை மேற்கொள்ள முடியாமல் போனதால் குத்தகைக்கு வழங்குவதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (ஔ) | கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ வெள்ளம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள ஜாகொடுவ வத்த காணியில் இருந்து 01 ரூட் 9.79 பர்சஸ் அளவு காணி வருடாந்த குத்தகை ரூபா 1,590,000 தொகை வீதம் நபர் ஒருவருக்கு சாட்டப்பட்டு காணியின் சந்தைப் பெறுமதி மீது அது ரூபா 26,500,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குத்தகைத் தொகை மிகவும் கூடிய பெறுமதியினை கொண்டிருந்தமையினால் அதனை செலுத்த முடியாது என | 2021 ஆண்டின் போது பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீடு கிடைத்திருந்ததுடன், அந்த ஆண்டிற்குரிய குத்தகைத் தொகை ரூபா 1,590,000 தொகையாகும். இந்தத் தொகையை செலுத்தும் படி 2021.07.19 திகதி குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டதுடன், அந்த குத்தகைத் தொகை கூடிய பெறுமதியினை கொண்டிருந்தமையினால் இந்த வியாபாரத்தின் மூலம் உழைக்கக்கூடிய வருமானத்தில் இருந்து இந்த குத்தகைத் தொகையை செலுத்துவது எவ்விதத்திலும் முடியாதமையால் இந்த குத்தகையை திருத்தித் தரும்படி கோரப்பட்டுள்ளது. அதன்படி, பணிப்பாளர் / பெறுமதி | அரச பெறுமதி மதிப்பீடு மீது குத்தகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவித்திருந்ததுடன், அதுவரை குத்தகைத் தொகை ஏதும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் நட்டஈடு இனால் 2022.01.07 திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும் அதனை மாற்ற முடியாது என விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன். அது தொடர்பாக உரிய குத்தகையாளருக்கு அறிவித்த பின்னர் அவரினால் மீண்டும் மேற்கூறிய பெறுமதி மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டு அதனை மீண்டும் விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பும்படி மேன்முறையீடொன்று இந்த ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக மீண்டும் 2023.07.04 திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. எவ்வாறாயினும் இதுவரை அரச பெறுமதி மதிப்பீடு கிடைத்திருக்காமையால் குத்தகை உடன்படிக்கைகளையும் வழங்க முடியாமல் உள்ளது. | |
| (க) | இப்பாகமுவ பிரதேச செயலப் பிரிவில் அமைந்துள்ள ராகெதர வத்த காணியில் இருந்து 70 ஏக்கர்கள் காரியம் தோண்டுவதற்காக அரச பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி மீது 05 வருட காலத்திற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2011 குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த காரியத்துடனான காணிக்காக 2023 திசெம்பர் 31 திகதி வரை செலுத்தியிருந்த தொகை ரூபா 8,110,356 தொகை அரச பெறுமதி மதிப்பீடு பெற்றிருக்காமையால் கிடைத்திருந்த முற்பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த கணக்காய்வு அறிக்கை திகதி வரை 12 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் பெறுமதி மதிப்பீடு செய்து குத்தகையை கணித்து அறவீடு செய்வதற்காக மற்றும் இரு தரப்பினரிடையே குத்தகை உடன்படிக்கை ஒன்று அணுகுவதற்கு ஆணைக்குழுவிற்கு இதுவரை முடியாமல் இருந்தது. | காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் 22(1)ஆ ஆ பிரிவின் கீழ் அரச பிரதான விலை மதிப்பீட்டாளரின் தற்போதைய பெறுமதி மதிப்பீட்டை வழங்கும் படி 2012.10.19 திகதி பணிப்பாளர் / பெறுமதிமதிப்பீடு மற்றும் நட்டஈட்டிற்கு அனுப்பப்பட்ட போதிலும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வழங்கியிருக்காததுடன், மாவட்ட பணிப்பாளரினால் 2022.01.15 திகதி பணிப்பாளர் / பெறுமதிமதிப்பீடு மற்றும் நட்டஈட்டிற்கு பிரதியொன்றுடன் காணியின் பெறுமதியை அறிவிக்குமாறு பணிப்பாளர் செயற்திட்டம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, காணிக்குரிய பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்காக தம்மிடம் ஆவணங்கள் ஏதும் காணப்படவில்லை எனவும், அதன் காரணமாக குறிப்பிட்ட ஆவணங்களை வழங்கும் படி அறிவித்து, பணிப்பாளர் / பெறுமதி மதிப்பீடு மற்றும் நட்டஈடு இனால் 2022.06.21 திகதிய கடிதத்தின் மூலம் பணிப்பாளர் / செயற்திட்டத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கோறிக்கையின் படி 2022.07.11 திகதிய மீண்டும் பெறுமதி மதிப்பீடு மற்றம் நட்டஈட்டுப் பணிப்பாளருக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2022.08.18 திகதி பிரதான விலை மதிப்பீட்டாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததடன், குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டை வழங்கும் | அரச பெறுமதி மதிப்பீடு மீது குத்தகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | படி பணிப்பாளர் / வருமானத்தினால் 2023.03.13 திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் படி பணிப்பாளர் / பெறுமதி மதிப்பீடு மற்றும் நட்டஈட்டினால் 2023.03.29 திகதிய மாகாண பெறுமதி மதிப்பீட்டாளருக்கு நினைவுபடுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் மீண்டும் 2023.12.25 திகதி பணிப்பாளர் / பெறுமதி மதிப்பீடு மற்றும் நட்டஈடு அவர்களுக்கு இந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைப்பதில் தாமதம் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இந்த செயற்திட்டத்தின் மூலம் இதுவரை ரூபா 8,937,144 இற்கான தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு முறைப் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ங) | கண்டி மாவட்டத்தில் அம்பலன்வத்த காணியில் 25 ஏக்கர்கள் தனியார் கம்பனி ஒன்றிற்கு சிலிக்கா செயற்திட்டம் ஒன்றிற்காக 2011 ஆண்டில் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2012 – 2015 மற்றும் 2017 – 2019 ஆண்டுகளின் போது குத்தகை தொகை ஏதும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023.12.31 திகதியளவில் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு அல்லது புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகம் மூலம் அறிக்கையை பெற்றுக்கொண்டு நியாயமான செய்முறை ஒன்றின் படி அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகையை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த காணிப் பகுதி தொடர்பாக பிரதான விலை மதிப்பாளரின் பெறுமதி மதிப்பீடு கிடைக்கும் வரை வருடாந்த அண்ணளவான பெறுமதி மதிப்பீடொன்றின் மீது குத்தகை செலுத்தும் படி 2018.01.21 திகதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்காக 2011.05.03 , 2020.09.14 மற்றும் 2021.01.27 ஆகிய திகதிகளில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2024.04.04 திகதிய பதிவாளர் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. காணிக்குரிய பெறுமதி மதிப்பீடு சிலிக்கா தொடர்பான தகவல்கள் கிடைக்கும் வரை தற்காலிக பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மீது குத்தகை அறவிடப்பட வேண்டியமையால் 2024.03.12 திகதி வருமானப் பணிப்பாளரினால் குத்தகையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி, 2024.04.03 திகதி ரூபா 2,000,000 தொகையொன்று எங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையின் மீதியாகிய ரூபா 2,127,500 தொகை விரைவாக பெறற்க்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதான | அரச பெறுமதி மதிப்பீடு அல்லது புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி குத்தகை தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளும் படியும் உரிய பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், 2012/2015 மற்றும் 2017/2019 ஆண்டுகளுக்கான குத்தகைத தொகை செலுத்தாமைக்கான காரணம் என் அக் காலப் பகுதியில் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை என ப்லுபே காரீய நிறுவனம் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ச) | திவுலபிடிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கலிமுரே வத்த துண்டு இலக்கம் 01 இன் 12 ஏக்கர் 02 ரூட் 4.48 பர்சஸ் அளவினுள் அமைந்துள்ள கருங்கற்கள் 2011 ஜூலை மாதம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் 12 வருடங்கள் கடக்கும் வரை குறிப்பிட்ட குத்தகையாளர் உரிய முறையில் குத்தகை செலுத்தாமை தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டிருக்காமையால் அதன் மூலம் உழைக்கக்கூடியதாக இருந்த வருமானம் ஒன்றை இழந்துள்ளது. | கம்பஹா மாவட்டத்தில் திவுலபிடிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கலிமுரே வத்த எனும் காணியில் 12 ஏக்கர் 02 ரூட் 4.48 பர்சஸ் அளவான அவ்வப்போது திருத்தப்பட்ட சட்டத்தன் 22(1) அ பிரிவிற்கு இணங்க 2011 ஆண்டு அரச பிரதான விலை மதிப்பீட்டாளரின் பெறுமதி மதிப்பீட்டின் மீது அனுபவிக்கும் காலத்திற்கு ஏற்ப பயன்படுத்தல் கட்டணம் ஒன்று உட்பட குத்தகைக்கு கொடுப்பதற்காக 2011.07.26 திகதி ஆணைக்குழுவின் தீர்மானம் கிடைத்திருந்தது. அதன்படி, பெறுமதி மதிப்பீட்டை அழைத்து குத்தகை செலுத்துமாறு 2023.01.23 திகதிய 15/6/4028 கொண்ட கடிதத்தின் மூலமும் 2023.10.24 திகதிய 3/5/2/1/கம்/95 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலமும் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், குத்தகை தொகையை செலுத்துவதற்கு புறக்கணித்தால் காணிப்பகுதி தொடர்பாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விருப்பத்தின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், 2023.05.29 திகதி குத்தகையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த கடிதத்தின் படி கொடுப்பனவு ஒன்று இன்றி அனுபவிப்பதற்கான அங்கீகாரம் வேண்டி குத்தகையாளரினால் 2023.08.22 திகதி கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. குத்தகை செலுத்தாமையால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 2023.10.17 திகதி பணிப்பாளர் சட்டம் அறிவுறுத்தப்பட்டதுடன், சட்ட நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும் என பணிப்பாளர் வருமானத்தினால் அறிவிக்கப்பட்டது. | சரியான உடன்படிக்கை மீது குத்தகை அறவிடப்பட வேண்டும். |
| (ஞ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1,123 தொகையாக காணப்பட்டதுடன், சட்டச் செலவுகள் என ரூபா 34,657,989 இற்காக | 2024 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட சரி செய்தல்கள் மேற்கொள்ளும் படி பணிப்பாளர் நிதி இற்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சட்டச் செலவு தொடர்பாக சரியாக கண்டறிய வேண்டும். |

தொகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ட) | 2021 ஆண்டின் போது ரூபா 350 மில்லியன் தொகை செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்திட்டத்தின் செலவுகளுக்கு நேரொப்பாக கிடைத்திருந்த வருமானம் ரூபா 22 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் இந்த செயற்திட்டம் வெற்றிகரமற்ற செயற்திட்டமொன்றென 2022 ஆண்டின் போது முடிவாக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 31 மில்லியனை விட மிகையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக துணைக் கருவிகள் பொறுத்தப்பட்டிருந்தன. மற்றும் அந்த சொத்துக்களின் வகைகள் மற்றும் பெறுமதிகள் தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 2023 மார்ச் 28 திகதிய அமப/23/383/615/017 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்த செயற்திட்டம் வெற்றி அடையாமைக்கான காரணமாக இருந்த விடயங்களை அந்த பணம் பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் அதற்காக பங்களிப்பு செய்திருந்த தரப்பினர் தொடர்பாக சுயாதீனமான முழுமையான விசாரணையொன்று மேற்கொள்வற்கு மூன்று அங்கத்தவர்களை கொண்ட விஷேட குழுவொன்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டு அந்த அறிக்கை 2023 ஏப்ரல் 29 திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சுச் செயலாளரின் 9/2/6/17 கடிதத்தின் மூலம் 02 வாரங்களினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஜூன் வரை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்பட்டிருந்த சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் வடமத்திய மாகாணத்தை மையமாக கொண்டு 35 நிலையங்கள் 29 பிரதேச செயலக பிரிவுகளில் பேணிச் செல்லப்பட்டது. அதற்காக ஆரம்ப செலவுகள் என ரூபா 700 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. முதலாவதாக ரூபா 350 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தப் பணத்தை பயன்படுத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அது வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வந்தது. இந்த செயற்திட்டம் 2021.12.31 திகதி வரை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் செயற்படுத்துவதற்கும் அதன் பின்னர் 2022.01.01 திகதியின் பின்னர் காணி அமைச்சின் செயற்திட்டம் ஒன்று என செயற்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. உற்பத்தி செய்யப்படும் உரம் விற்பனை செய்வதற்காக கொமர்சல் உரக் கம்பனியுடன் உடன்படிக்கையொன்றும் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன், உற்பத்தி செய்யப்படும் உரம் அந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து அதன் மூலம் ரூபா 9 மில்லியன் மாதாந்த வருமானம் எதிர்பார்க்கப்பட்டது. உடன்படிக்கைக்கு இணங்க கொமர்சல் உரக் கம்பனியும் இந்த உரம் கொள்வனவு செய்தலை இடைநிறுத்தியிருந்தது. இந்த அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்து செயற்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம அரசாங்கத்திற்கு நட்டம் ஒன்று ஏற்படுவதனால் 2022.07.14 திகதி இந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டது. சேதனப் பசளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 81,150,320.60 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. 2022.07.14 திகதிய சேதனப் பசளை செயற்திட்ட அலுவல்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் இந்த கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய முறை தொடர்பாக தீர்மானிப்பதற்காக அமைச்சுச் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், சேதனப் பசளை உற்பத்திக்காக கொள்வனவு | விஷேட விசாரணை அறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் அரச நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு இந்த குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இலங்கை வான்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், எல்ல பிரதேச சபை ஆகிய நிறுவனங்களுக்கு இந்த இயந்திர உபகரணங்கள் வழங்கப்பட்டு முடிவாக்கப்பட்டிருந்தது. மூன்று அங்கத்தவர் கொண்ட விசாரணை குழுவினால் ஆணைக்குழுவினால் சேதனப் பசளை செயற்திட்டம் ஆரம்பிப்பது தொடர்பான கோப்புக்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பான ஆவனங்கள் வேண்டப்பட்டதுடன், அந்த ஆவணங்கள் அனைத்தும் அந்தக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும், இறுதி விசாரணை அறிக்கை ஒன்று தொடர்பாக ஆணைக்குழு அறிந்திருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| தரம் | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் படி | | 2018 அமைச்சரவை தீர்மாணத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | | ஆணைக்குழுப் பத்திரத்தின் படி சேர்க்கப்பட்ட ஊழியர்கள் (ஒப்பந்த அடிப்படை) | | மொத்த உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | | | |
| சிரேஷ்ட முகாமைத்துவம் | 5 | 4 | 11 | - | - | - | 4 | 1 | - |
| மத்திய முகாமைத்துவம் | 33 | 30 | 9 | 3 | - | - | 33 | - | - |
| தொழில்நுட்ப | 6 | 3 | - | - | - | - | 3 | 3 | - |
| கனிஷ்ட முகாமைத்துவம் | 4 | 3 | 21 | - | - | - | 3 | 1 | - |
| • தனிப்பட்ட முறையிலான பதவி | 28 | 20 | - | - | - | - | 20 | - | |
| முகாமைத்துவ உதவியாளர் | 215 | 182 | 153 | 123 | 77 | 56 | 361 | - | 106 |
| • தனிப்பட்ட முறையிலான பதவி | 40 | | | | | | | | |
| ஆரம்ப | 61 | 39 | 20 | 22 | 13 | 8 | 75 | - | 14 |
| **மொத்தம்** | **392** | **281** | **214** | **148** | **90** | **64** | **499** | **5** | **120** |

- ஒப்பந்த சேவையில் கடமையாற்றும் பங்களா கவலாளி ஒருவர் மற்றும் 5 அமைய காவலாளிகள் உட்படுத்தப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஜுன் 27 திகதிய இலக்கம் அமப/18/1126/829/002 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒரு வருட காலத்திற்காக 214 உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றுகையின் படி 3 வருட காலத்திற்காக அந்த உத்தியோகத்தரின் சேவையை நீடிப்பதற்கு முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 138 முகாமைத்துவ உதவியாளர்கள், 10 சாரதிகள், 16 அலுவலக உதவியாளர்களுக்காக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அது தவிர ஆணைக்குழுப் பத்திரத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டிருந்த 56 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 8 ஆரம்ப தரப் பதவிகளுக்காகவும் முகாமைத்துவத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | 2018.06.27 திகதி ஆணைக்குழுவிற்கு முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர்கள், சாரதிகள் மற்றும் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) ஆகிய 214 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2019.09.18 திகதிய வெளியிடப்பட்டிருந்த பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 29/2019 இற்கு இணங்க வினைப்படுத்தப்பட்ட 25/2014 மற்றும் 25 (2014)(1) சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி ஒப்பந்த சேவைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக்கப்பட்டது. இது தொடர்பாக உத்தியோகத்தர்கள் முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் முறையான நடைமுறையை கடைபிடித்து நி.பி. 71 இன் படி அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, இலக்கம் 2/1/12/22 மற்றும் 2022.01.20 திகதிய செயலாளர், காணி அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தலைவரின் கையொப்பத்துடன் நிரந்தர பதவியணியில் உட்படுத்துவதற்காக அங்கீகாரம் வேண்டி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று 2022.02.22 திகதி முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் முகாமைத்துவச் சேவைத் திணைக்கள உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி பதவியணியில் காணப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக 2022.05.24 திகதி காணி அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கூறிய கலந்துரையாடலில் திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கும் படி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் படி பதவியணி எண்ணிக்கையை திருத்துவற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அறிவிக்கப்பட்டதுடன், அதன்படி திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டதுடன், 2022.10.21 திகதி பொது முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் பின்னர் 2022.11.03 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் மிகை பதவியணியை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டதுடன், அந்த கலந்துரையாடலின் தீர்மானத்தின் படி அந்த சேர்க்கப்பட்ட பதவியணியை ஆணைக்குழுவின் கடமை தேவைப்பாடுகள் மீது நிரந்தர பதவியணியில் சேர்ப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, அமப/23/0293/615/008 மற்றும் 2023.02.06 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2023.04.04 திகதி தீர்மானம் ஒன்று வழங்கப்பட்டது. எனினும், அந்தத் தீர்மானத்தின் மூலம் ஏற்பட்டிருந்த செய்முறைசார் சிக்கல் தன்மைகள் தீர்க்கப்படாமையால், மீண்டும் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கும் படி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி அமைச்சர் மற்றும் அமைச்சுச் செயலாளருடன் கலந்துரையாடி அமப/24/0689/615/013 மற்றும் 2024.06.12 திகதிய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தப் பத்திரத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற தீர்மானத்தின் படி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மறுசீரமைப்புக்கு உரிய நிறுவனம் ஒன்றாக காணப்படுவதனால் இந்த சந்தர்ப்பத்தில் பதவிகள் ஏற்படுத்துதல் மற்றும் பதவியணி ஆட்சேர்ப்பு பொறுத்தமற்றது எனவும், அதன் காரணமாக பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014 மற்றும் 25/2014(1) இன் கீழ் நிரந்தரப்படுத்ததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிருவாக ரீதியான செயற்பாடொன்றின் காரணமாக பதவியணியில் உட்படுத்துவதற்கு முடியாமல் போன ஏதேனும் ஊழியர்கள் காணப்படின், தற்போது ஆணைக்குழுவில் வெற்றிடமாக

உள்ள சமமான பதவிகளுக்காக அந்த ஊழியர்களை நியமனம் செய்தல் தொடர்பாக எதிர்ப்பு ஒன்று இல்லை எனவும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய அமைச்சரவை தீர்மானம் 2024.07.02 திகதி நடைபெற்ற 809 ஆவது ஆணைக்குழுவிற்கு பத்திரம் ஒன்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அங்கு வழங்கியிருந்த தீர்மானம் ஆவது அமப/24/0689/615/013 மற்றும் 2024.06.12 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி, தொடர் இலக்கம் III இன் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கங்கள் 25/2014 மற்றும் 25/2014(1) கீழ் நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள ஊழியர்களில், ஆணைக்குழுவில் வெற்றிடங்கள் காணப்படும் 77 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 18 அலுவலக உதவியாளர் பதவிகள் மற்றும் 05 சாரதிப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முதிர்வு அடிப்படையில் கல்வித் தகைமைகள் பரிசோதனை செய்து தெரிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தின் படி தகைமைகளை பரிசோதனை செய்வதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு தற்போது கோப்புக்கள் பரிசோதனை செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.